OS.No.27/2013 நாள்:13.08.2018

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திரு.சிக்கந்தர் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தண்டபாணி | சாதி | : -- |
| தந்தை பெயர் | : பாலகிருஷ்ணன் | நாட்டினம் | : இந்து |
| கிராமம் | : காட்டாகரம் | வேலை | : விவசாயம் |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி | வயது | : 35 |

<u>வ.சா.1 ___ தண்டபாணி, முதன்மை விசாரணை வாக்குமூலம்</u>

நான் இவ்வழக்கில் வாதி. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். 06.10.1960ம் தேதியிட்ட கிருஷ்ணகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.247/1960 வழக்கு பதிவேட்டின் நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 27.12.1967ம் தேதி போடியம்மாள் மற்றும் முனியப்பநாயுடு ஆகியோர் பெயரில் ஏற்பட்ட கிரயப்பத்திரத்தின் பதிவு நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 09.08.2006ம் தேதியில் என் பெயரில் ஏற்பட்ட கிரயப்பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.3** ஆகும். 30.08.2007ம் தேதியில் என் பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டதற்கான உத்தரவு **வா.சா.ஆ.4** ஆகும். 25.07.2012ம் தேதியிட்ட என் பெயரிலுள்ள கணினி பட்டா **வா.சா.ஆ.5** ஆகும். வழக்கு சொத்துக்களுக்கான பசலி எண்.1422-க்கான அடங்கல் பதிவேட்டின் நகல் **வா.சா.ஆ.6** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.